## தமிழ்நாட்டின் உரிமைகள் — நலன்களுக்காக

# நாடாளுமன்றத்தை நாள்தோறும் அதிரவைக்கும் கழக எம்.பி.க்கள்!



தமிழ்நாட்டில் இயங்கி வரும் — ஒன்றிய அரசின் கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில்

## தமிழ் மொழியை தொடர்ந்து புறக்கணிப்பது ஏன்?

### மக்களவையில் — தயாநிதி மாறன் கேள்வி!



புதுடெல்லி, மார்ச் 19-

தமிழ்நாட்டில் செயல்படும் கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் உள்ள தமிழ், இந்தி மற்றும் சமஸ்கிருத ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவு? ஆசிரியர்கள் நியமனத்தில் சமநிலை உள்ளதா என பல்வேறு கேள்விகளை மக்களவையில் ஒன்றிய கல்வி அமைச்சகத்திடம் தயாநிதி மாறன் எழுப்பினார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு:-

நாட்டில் தற்போது உள்ள கேந்திரிய வித்யாலயா மற்றும் பிரதம மந்திரி (PM SHRI) பள்ளிகளின் எண்ணிக்கை மற்றும் கடந்த ஐந்து ஆண்டுகளில் இவற்றின் செயல்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிதி மாநில வாரியாக எவ்வளவு? குறிப்பாக தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு எனக் கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாட்டில் செயல்படும் PM SHRI மற்றும் கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் உள்ள தமிழ், இந்தி, மற்றும் சமஸ்கிருத ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை என்ன? ஒவ்வொரு பள்ளியின் மொழித் துறைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு எனக் கேள்வி எழுப்பினார்.

இந்தியாவின் மொழிப் பன்மைத்துவத்தை கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் உள்ள PM SHRI மற்றும் கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில், மாநில மொழியான தமிழுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் அரசு ஆசிரியர்கள் நியமனத்தில் சமநிலை உள்ளதா எனக் கேள்வி எழுப்பினார்.

இந்தக் கேள்விகளுக்கு ஒன்றிய அரசின் கல்வி அமைச்சகம் அளித்த பதில்கள் மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அளிக்கிறது.

**வேதனை தரும் பதில்!**

தமிழ்நாட்டில் உள்ள 45 கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில், 24 பள்ளிகளில் மட்டுமே ஒப்பந்த அடிப்படையில் தமிழ் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு தமிழ்ப் பாடம் கற்பிக்கப்படுகிறது. மீதமுள்ள 21 பள்ளிகளில் தமிழ்ப் பாடங்கள் தமிழ்நாடு அரசின் தன்னாட்சி அமைப்பான Tamil Virtual Academy (TVA) மூலம் கற்பிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் PM SHRI கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் 69 இந்தி ஆசிரியர்கள், 50 சமஸ்கிருத ஆசிரியர்கள் உள்ளனர். ஆனால் தமிழ் ஆசிரியர்கள் 34 பேர் மட்டுமே பணியாற்றுகின்றனர். இதில் தமிழ் மொழி ஆசிரியர்கள் ஒப்பந்த அடிப்படையில் (contract basis) நியமிக்கப்படுகின்றனர், நிரந்தர மொழி ஆசிரியர் பணியிடங்கள் இந்தி, ஆங்கிலம் மற்றும் சமஸ்கிருதத்திற்கு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிலவரப்படி, நாடு முழுவதும் 1253 கேந்திரிய வித்யாலயாக்கள் செயல்பட்டு வருகின்றன, இதில் தமிழ்நாட்டில் 45 கே.வி. பள்ளிகளும் அடங்கும். இந்திய அரசால் கேந்திரிய வித்யாலயா சங்கத்திற்குக் ஒதுக்கப்படும் நிதிகள், "GrantinAidSalaries", "Grantin AidGeneral", "Grant for Creation of Capital Assets" என்ற தலைப்புகளில் வழங்கப்படுகின்றன. ஆனால், மாநில/ யூனியன் பிரதேசம்/ மாவட்டம்/ தனிப்பட்ட கேந்திரிய வித்யாலயா அளவில் தனியாக வழங்கப்பட்ட நிதியின் தரவுகள் இல்லை.

இந்தப் பள்ளிகளில் முதன்மையாக இந்தி மற்றும் ஆங்கில மொழிகளில் மட்டுமே பாடங்கள் நடத்தப்படுகின்றன. கேந்திரிய வித்யாலயா கல்விக் குறியீட்டின் 112வது பிரிவின்படி, 15 அல்லது அதற்கு மேற்பட்ட மாணவர்கள் விரும்பினால் மட்டுமே உள்ளூர்/ பிராந்திய மொழியில் பாடங்கள் நடத்தப்பட கூடுதல் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அப்போது கூட கேந்திரிய வித்யாலயா சங்கத்தின் துணை ஆணையர் அனுமதி பெற்ற பிறகு, ஒரு பகுதி நேர ஒப்பந்த ஆசிரியர் தான் (parttime contractual teacher) நியமிக்கப்படுவார்.

இவ்வாறு ஒன்றிய கல்வி அமைச்சகம் பதிலளித்துள்ளது.

மணிப்பூர் மாநிலம் இயல்பு நிலைக்குத் திரும்பிட

## போதுமான நிதி ஒதுக்கி கருணை காட்டிடுவீர்!

### மாநிலங்களவையில் பி.வில்சன் வலியுறுத்தல்!



புதுடெல்லி, மார்ச் 19-

"மணிப்பூர் மாநிலம் இயல்பு நிலைக்குத் திரும்பிட போதுமான நிதி ஒதுக்கிட கருணை காட்டிடு வீர்" என்று நாடாளுமன்ற மாநிலங்களவையில் கழக உறுப்பினர் பி.வில்சன் வலியுறுத்தினார்.

மாநிலங்களவையில் மணிப்பூர் நிதி ஒதுக்கீட்டு மசோதா மீது கழக உறுப்பினர் பி.வில்சன் எம்.பி அவர்கள் பேசியதாவது:-

இந்தியா எனது தாய் நாடு இந்தியர் யாவரும் எனது சகோதர - சகோதரிகள் என்ற தேசிய உறுதி மொழியை உச்சரித்துக் கொண்டேதான் பள்ளி நாட்களில் நாம் வளர்ந்தோம்.

ஆனால், இன்று அரசாங்கம் உண்மையிலேயே இந்த வார்த்தைகளின் மீது நம்பிக்கை கொண்டுள்ளதா என்று கேட்க விரும்புகிறேன்.. ஏனெனில், ஒன்றிய அரசாங்கமானது இந்த வார்த்தைகளின் மீது நம்பிக்கை கொண்டிருக்குமேயானால், மணிப்பூர் மக்களுக்கு ஆதரவாக இருந்திருப்பார்கள், அவர்களின் கடினமான நேரத்தில் அவர்களுக்கு உதவியிருப்பார்கள், அவர்களின் கண்ணீரைத் துடைத்திருப்பார்கள், அவர்களின் வீடுகளை மறு கட்டமைப்பு செய்து அளித்து அவர்களது கண்ணியத்தை காத்திருப்பார்கள்.

ஆனால், இந்த அரசாங்கம் என்ன செய்தது? அவர்களைக் கைவிட்டுவிட்டது. அவர்களைத் தூக்கி எறிந்துவிட்டது. கடினமான காலத்தில் அவர்களை ஏமாற்றிவிட்டது. 2023 மே மாதம் தொடங்கிய இனக்கலவரமானது உள்நாட்டுப் போராக வடிவெடுத்து 22 மாதங்கள் கடந்தும் இன்று வரை அது முடிவுக்கு வரவில்லை. மணிப்பூரானது பற்றி எறிந்தபோது, இரண்டு பெண்கள் நிர்வாணமாக ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டபோது, வீடுகள் சாம்பலாக்கப்பட்டபோது, குழந்தைகள் பாதுகாப்புக்காக அழுதபோது, பெண்கள் மிகவும் மனிதாபிமானமற்ற முறைகளில் கொடுமைப்படுத்தப்பட்டபோது, நமது பிரதமர் அவர்கள் எங்கே இருந்தார்? அவர் மணிப்பூரில் இல்லை. அவர்களது தலைவர் அவர்களுக்குத் தேவைப்பட்ட நேரத்தில் அந்த மக்களுடன் அவர் இல்லை.

**பிரதமர் வெளிநாட்டில் கை குலுக்கிக் கொண்டிருந்தார்!**

அவர் வெளிநாட்டில் கைகுலுக்கிக்கொண்டு இருந்தார். வாக்கு சேகரித்துக்கொண்டிருந்தார். தேர்தல் பிரச்சாரங்களை நடத்திக்கொண்டிருந்தார்.

ஆனால், அவருக்கு மணிப்பூருக்குச் சென்று அந்த மக்களிடம் நான் உங்களுக்குத் துணை நிற்கிறேன் என்று சொல்வதற்கு நேரமோ அல்லது தைரியமோ இருந்திடவில்லை.

ஒட்டு மொத்த மணிப்பூர் மாநிலமும் மற்ற அனைத்து மாநிலங்களில் இருந்தும் துண்டிக்கப்பட்டது மற்றும் மணிப்பூருக்குள் நுழைய யாரும் அனுமதிக்கப்படவில்லை. அங்கு இணைய வசதிகள், மின்சாரம், குடிநீர், உணவு என்று எதுவுமே இல்லை. பாலியல் வன்கொடுமை மற்றும் கற்பழிப்புக்காக ஒரு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய கிட்டத்தட்ட 14 நாட்கள் ஆனது.

இப்போது, நிவாரண முகாம்களுக்கு 400 கோடியையும், ஒரு பாதுகாப்பு நிதியை நிறுவ 500 கோடி முதலீட்டு நிதியையும் அவர்கள் அறிவிக்கிறார்கள், அதுவும் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு.

**நிதி ஒதுக்கீடு போதுமானதல்ல!**

பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் 7,000 வீடுகளுக்கு ஒப்புதல் அளிக்கிறார்கள். தங்கள் வீடுகள் தீக்கிரையாவதைப் பார்த்தவர்களின் வாழ்க்கையை இந்த பணத்தால் மீண்டும் கட்டியெழுப்ப முடியுமா? என்பதை நீங்கள் சொல்லுங்கள். கொடூரமாக படுகொலை செய்யப்பட்ட அவர்களின் அன்புக்குரியவர்களை மீண்டும் கொண்டு வர முடியுமா? பெண்களின் கண்ணியம் பறிக்கப்பட்டு, சொந்த மண்ணில் ஏதோ உயிரற்ற பொருட்களைப் போல ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்ட அப்பெண்களின் காயங்களை இந்த பணத்தால் ஆற்ற முடியுமா?

மணிப்பூர் மாநிலத்தில் 60,000 க்கும் மேற்பட்ட இடம்பெயர்ந்த மக்கள், உயிர் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்கள், உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு, தற்காலிக தங்குமிடம், இடம்பெயர்ந்த மக்களுக்கு வீட்டுவசதி கட்டுதல் போன்றவற்றை நிறைவேற்ற இந்த நிதி ஒதுக்கீடானது உண்மையில் போதுமானதாக இல்லை.

**மணிப்பூரின் உண்மை இதுதான் :**

300 க்கும் மேற்பட்ட அப்பாவி உயிர்கள் பறிபோயுள்ளன. கலவரம் தொடங்கிய 36 மணி நேரத்திற்குள் 249 தேவாலயங்கள் தீக்கிரையாக்கப்பட்டன மற்றும் இதுவரை 400 தேவாலயங்கள் அழிக்கப்பட்டுள்ளன. அதிர்ச்சியூட்டும் வகையில் மதிப்பிடப்பட்ட மொத்த சேதம் என்பது, சம்பிரதாயமாக வழங்கப்படும் சொற்ப உதவியை விட மிக அதிகமாக ரூ.20,000 கோடி ஆகும். வன்முறையால் பாதிக்கப்பட்ட மணிப்பூரில் மிக அதிக பணவீக்கம், வேலையின்மை, அமைதியின்மை மற்றும் வறுமை அதிகரித்து வருகிறது, பொருளாதாரம் விரிவடைந்தாலொழிய இந்தப் பிரச்சினைகள் எவற்றையும் தீர்க்க முடியாது. வெற்றுக் கூச்சல் மணிப்பூரின் வலியைத் தீர்க்காது. வெறுமனே ஒப்புக்கொள்வதால் அதன் காயங்கள் ஆறாது.

மணிப்பூரில் அமைதி வேண்டும் என்று நீங்கள் உண்மையிலேயே விரும்பினால், அந்த மக்களின் கருத்துக்களைக் கேளுங்கள். மூடிய அறைக்குள் நடக்கும் கூட்டங்களில், அதிகார வர்க்க அறிக்கைகளில் அல்லாமல், மக்களுடன் களத்தில், மணிப்பூரின் தெருக்களில், அந்த மக்களின் வீடுகளில், அவர்களின் துயரத்திற்கு மத்தியில்தான் தீர்வு காண முடியும். அவர்களின் அபிலாஷைகள், அவர்களின் அச்சங்கள், அவர்களின் வேதனையைக் கேளுங்கள். நீங்கள் உண்மையிலேயே அமைதியை விரும்பினால், உண்மையை எதிர்கொள்ள தைரியமாக இருங்கள், அது எவ்வளவு சிரமமாக இருந்தாலும்.

ஒன்றை தெளிவாகச் சொல்லுகிறேன். இது மணிப்பூர் மக்களுக்கு எதிரான குற்றம் மட்டுமல்ல; இது மனிதகுலத்திற்கு எதிரான குற்றம், நமது தேசத்தின் கட்டமைப்புக்கு எதிரானது.

பெண் குழந்தைகளைக் காப்பாற்றுங்கள், பெண் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுங்கள் என்று முழக்கமிடும் ஒரு அரசாங்கம், மணிப்பூரின் மகள்கள் கொடுமைப்படுத்தப்படும் போது, பாலியல் பலாத்காரம் செய்யப்படும்போது, சித்திரவதை செய்யப்படும் போது மௌனமாக இருப்பது நிச்சயமாக சரியல்ல. இது ஒரு பெண்ணைப் பற்றிய கதை மட்டுமல்ல. ஒரு மாநிலத்தின் துன்பம் மட்டுமல்ல. இது நமது தேசத்தின் ஆன்மாவில் படிந்த கறை.

அதேபோன்று, ரூபாய் நோட்டுகளில் ரூபாய் என்கிற தமிழ் வார்த்தை உள்ளது என்பதை நிதியமைச்சர் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். எனவே, எங்களுடைய தமிழ்நாடு பட்ஜெட்டில் ரூ எனும் தமிழ் வார்த்தையை பயன்படுத்துவதில் எந்தவித தவறும் இல்லை.

மணிப்பூர் இயல்பு நிலைக்கு திரும்பவும், அந்த மாநிலத்திற்கு போதுமான நிதி ஒதுக்கீடு செய்யவும் ஒன்றிய நிதியமைச்சர் அவர்கள் கருணை காட்ட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு பி. வில்சன் பேசினார்.

இரும்பு பயன்பாட்டின் தமிழக தொன்மைச்சான்று

## உலக அளவில் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படுமா?

### மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி!



புதுடெல்லி, மார்ச் 19-

இரும்பு பயன்பாட்டின் தமிழக தொன்மைச் சான்று நிரூபணம் ஆனதும் உலக அளவில் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படும் என ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

தி.மு.க. எம்.பி. தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில் கேள்வி நேரத்தின் போது ஒன்றிய கலாசாரத் துறை அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

அதாவது, "தமிழ்நாட்டின் சிவகளையில் சமீபத்தில் கிடைத்த தொல்பொருள் கண்டுபிடிப்புகள் இந்தியாவின் இரும்பு யுகம் பற்றிய புரிதலில் புரட்சியை ஏற்படுத்தி உள்ளன.

கங்கை சமவெளிகளின் இரும்பு உருக்குதலுக்கு முன்பே கி.மு.2172 க்கு முந்தையது இது என்பதை அறிவியல் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. எங்கள் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இதனை அறிவியல் பூர்வமாக நிரூபித்து, அங்கு ஒரு வரலாற்று அருங்காட்சியகத்தை அமைக்கும் திட்டத்தை முன்மொழிந்துள்ளார்.

இதுபோல் ஒன்றிய அரசும் இதனை அங்கீகரித்து, உலக அளவில் கொண்டு செல்லுமா?" என எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய சுற்றுலா மற்றும் கலாசாரத்துறை அமைச்சர் திரு.கஜேந்திர சிங் ஷெகாவத் பதில் அளித்து பேசியதாவது:

தமிழகத்தின் தொல்லியல் கண்டுபிடிப்புகள் பற்றி ஊடகங்கள் மூலம் அறிந்து இருக்கிறோம் இந்த கண்டுபிடிப்பு பற்றி தமிழக முதலமைச்சரும் சொல்லி இருந்தார். இதற்கான சான்றுகள் உறுதி செய்யப்பட்டதும் உலக அளவில் அதனை கொண்டு செல்வதற்கான முன்னெடுப்பு மேற்கொள்ளப்படும் என பதில் அளித்தார்.

"சிறுபான்மையின இளைஞர்கள் நலன் காக்கும்

## கிரீப் நவாஸ் வேலைவாய்ப்பு திட்டம் செயல்படாமல் இருக்க என்ன காரணம்?

### மாநிலங்களவையில் எம்.எம்.அப்துல்லா கேள்வி!



புதுடெல்லி,மார்ச் 19-

"நாட்டில் சிறுபான்மையின இளைஞர்கள் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மூலம் நிலையான வேலைவாய்ப்புகளைப் பெற உதவிடும் கிரீப் நவாஸ் வேலைவாய்ப்பு திட்டத்தின்படி கடந்த 5 ஆண்டுகளில் பயனடைந்தோரின் எண்ணிக்கை எவ்வளவு? இந்த திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டுள்ளதா? குறைக்கப்பட்டிருந்தால், அதன் காரணங்கள் மற்றும் அதனால் பயனாளிகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் என்ன?" போன்ற கேள்விகளை மாநிலங்களவையில் கழக உறுப்பினர் எம்.எம். அப்துல்லா எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு அவர்கள், "சிறுபான்மையினர் நலனுக்காக ஒன்றிய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, அவர்களின் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்ற த்திற்காக பல்வேறு நட வடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆனால் கிரீப் நவாஸ் வேலைவாய்ப்பு திட்டத்திற்கு கடந்த 5 ஆண்டுகளில் எந்தவிதமான இலக்கும் நிர்ணயம் செய்யப்படவில்லை. இருப்பினும், பல்வேறு திட்டத்தின் கீழ், 2018-19 முதல் மௌலானா அசாத் கல்வி அறக்கட்டளை மூலம் 39,000 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

மேலும் ஒன்றிய அரசு புதிய வேலைவாய்ப்பு மற்றும் தொழில்பயிற்சி திட்டங்களை உருவாக்கி செயல்படுத்த உள்ளது. குறிப்பாக, தொழில் முனைவோர் பயிற்சி மற்றும் சுயதொழில் மேம்பாட்டிற்காக புதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கரீப் நவாஸ் வேலைவாய்ப்பு திட்டத்தின் நிதியை மீண்டும் உயர்த்தி, சிறுபான்மையினருக்கு பெரும் அளவில் பயனளிக்கும் வகையில் விரிவுபடுத்தும் திட்டங்களை ஒன்றிய அரசு பரிசீலித்து வருகிறது" என்று பதிலளித்துள்ளார்.

தேசிய தகுதி அடிப்படையிலான கல்வி உதவித் தொகை திட்டத்தால்

## தமிழ்நாடு உட்பட நாட்டில் பயனடைந்தோர் எவ்வளவு பேர்?

### மக்களவையில் சி.என். அண்ணாதுரை கேள்வி!



புதுடெல்லி, மார்ச் 19-

தேசிய தகுதி அடிப்படையிலான கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் (என்.எம்.எம்.எஸ்.எஸ்.) தமிழ்நாடு உள்ளிட்ட நாடு முழுவதும் நடந்த மூன்று ஆண்டுகளில் பயனடைந்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கையை ஒன்றிய கல்வி அமைச்சர் வெளியிட வேண்டும் என்று மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி கழக உறுப்பினர் கேள்வி எழுப்பினர்.

அவரது கேள்விகள் வருமாறு:

(அ) தேசிய தகுதி அடிப்படையிலான கல்வி உதவித் தொகுதி திட்டத்தின் (NMMSS) நோக்கங்கள் மற்றும் முக்கிய அம்சங்கள்;

(ஆ)தமிழ்நாடு உட்பட கடந்த மூன்று ஆண்டுகளில் நாட்டில் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை;

(இ) ஜனவரி 2020 முதல் இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட, அனுமதிக்கப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட நிதியின் விவரங்கள், ஆண்டு வாரியாக பீகார் உட்பட மாநிலம்/யூடி வாரியாக;

(ஈ) திட்டத்தை செயல்படுத்துவதில் ஏதேனும் சவால்களை அரசு கண்டறிந்துள்ளதா மற்றும் அப்படியானால், இது தொடர்பாக அரசு எடுத்த நடவடிக்கை என்ன;

பீகார் உட்பட நாடு முழுவதும் இத்திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகையை திறம்பட கண்காணிப்பது, வெளிப்படைத்தன்மை மற்றும் சரியான நேரத்தில் வழங்குவதை உறுதிசெய்ய அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா அப்படியானால், அதன் விவரங்கள்;

(எஃப்) உதவித்தொகைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க, தகுதிக்கான அளவுகோல்களை திருத்த அல்லது உதவித்தொகையை உயர்த்தி, நலிந்த பிரிவைச் சேர்ந்த அதிகத் தகுதியுள்ள மாணவர்களை ஆதரிப்பதற்கு அரசாங்கத்தின் திட்டங்கள் ஏதேனும் உள்ளதா அப்படியானால், அதன் விவரங்கள்;

(g) பீகாரில் தகுதியுள்ள மாணவர்களிடையே NMMSS பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளின் விவரங்கள்;

(எச்) மாநிலத்தில் அதிகரித்து வரும் உதவித்தொகைகளின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக இந்தத் திட்டத்தின் கீழ் பீகாருக்கான ஒதுக்கீட்டை அதிகரிக்க அரசாங்கம் பரிசீலிக்கிறதாமற்றும் அப்படியானால், அதன் விவரங்கள்; மற்றும்

(i) பீகாரில் NMMSS வழங்குவது தாழ்த்தப்பட்ட மாணவர்களிடையே கல்விக்கான அணுகலை மேம்படுத்தியதா மற்றும் அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

மேற்காணும் கேள்விகளுக்கு ஒன்றிய கல்வி அமைச்சர் விரிவான பட்டியல்களுடன் பதிலளித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோ.வி.தட்சிணாமூர்த்தி

**மார்ச் 19 (2012)**



நான்கு முறை ஆர்.கே.நகர் தொகுதிக்குட்பட்ட 7வது வார்டு கிளைக் கழகச் செயலாளராகவும், இரண்டுமுறை வடசென்னை மாவட்டக் கழக பொருளாளராகவும், அதன்பின் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் கழகப் பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சியின் தண்டையார்பேட்டை மண்டலக் குழு தலைவராக பணியாற்றி அப்பகுதி மக்களின் அன்பைப் பெற்றவர்.

சென்னை குடிநீர் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வுகாண சென்னை மாவட்டக் கழகம் நடத்திய சாலை மறியலில் கலந்து கொண்டு கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டவர்.

கழகம் அறிவித்த இலங்கைத் தமிழர்களுக்கு பாதுகாப்பு தரக்கோரி நடத்திய அறப்போராட்டம், இந்தித் திணிப்பை எதிர்த்து கழகம் நடத்திய அறப்போராட்டம் ஆகியவற்றில் கலந்துகொண்டு சிறை தண்டனை பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**